**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 12.03.2026

SC. 141/2023

**அ.சா 3 – தமிழ்மணி**

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ம் நாள் **தமிழ்மணி** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **தமிழ்மணி** | தந்தை பெயர் | பொன்னு |
| வயது | 55 | கிராமம் | ஒசூர் |
| வட்டம் | ஒசூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**( எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**முதல் விசாரணை : –**

1. நான் ஒசூர் நகர காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் , அ.சா 1 யிடம் புகாரை பெற்று வழக்கு பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு. கண்ணன் என்பவருக்ககாகவும், புலன் விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் அவர்கள் திரு. ராஜா சோமசுந்தரம் அவர்களுக்காக ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். இதில் காவல் உதவி ஆய்வாளர் திரு. கண்ணன் என்பவர் இறந்து விட்டார் என்பதை தெரிந்து கொண்டேன். ,

2. இவ்வழக்கில், ப.சா 9 திரு. கண்ணன் அவர்கள் 08.11.2016 ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்த போது , அ.சா 1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று, புகாரின் தன்மைக்கேறப் நிலைய குற்ற எண் 686/2016 ச/பி 392, 397, 506(ii) இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். பின்னர், புகார்

மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்களை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், அதில் ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு. ராஜா சோமசுந்தரம் அவரிடம் ஒப்டைத்துள்ளார். அந்த புகார் **அ.சா.ஆ 2** ஆகவும், முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 3** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

3. வழக்கின் கோப்புகளை பெற்ற காவல் ஆய்வாளர் திரு. ராஜா சோமசுந்தரம் அவர்கள் அன்றைய தினமே , 08.11.2016 ம் தேதி மாலை 5.00 மணியைபோல் சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் 1. மஞ்சுநாத் 2. வெங்கடாசலம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ 4** ஆகவும், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ 5** ஆகவும். குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், மஞ்சுநாத், வெங்கடாசலம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, சம்பவ இட சாட்சிகளான அ.சா 1 கோவிந்தராஜ் என்பவரையும் , பின்னர் ஹரி கிருஷ்ணன், குருநாதன் , ராமச்சந்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4. பின்னர், இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில், அன்றைய தினமே 08.11.2016 ம் தேதி இரவு 7.00 மணியைபோல் ஒசூர் பேருந்து நிலையம் திருவண்ணாமலை பஸ் நிற்கும் இடம் அருகே, எதிரியை கைது செய்து விசாரிக்க , அவர் தானக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் 1. ராமகிருஷ்ணன் 2. நாராயணன் ஆகியோர்கள் முன்னிலையில் , ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான என்னிடம் வைத்துள்ள கத்தியையும், ரூ. 1500 /– ஐயும் தங்களிடம் ஒப்படைக்கிறேன் என்ற பகுதி மட்டும், **அ.சா.ஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் ஆஜர் செய்த கத்தியையும் ரூ. 1500/– ஐயும், அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் கைப்பற்றியுள்ளார். அந்த கைபற்றறுதல் மகஜர்

**அ.சா.ஆ 7** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது, பின்னர் சாட்சிகள் ராமகிருஷ்ணா மற்றும் நாராயணப்பா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன் பின்னர், எதிரிகையும் கைப்பற்றிய பொருட்களையும் நிலையம் கொண்டு வந்த கைப்பற்றிய கத்தி மற்றும் ரூ. 1500/– க்கும் படிவம் 91 தயார் செய்து கைப்பற்றிய பொருட்களையும், எதிரியையும், நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார், அந்த படிவம் 91 **அ.சா.ஆ 8** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. அந்த கத்தி **அ,சா,பொ 1** ஆகவும், பணம் ரூ. 1500 /– (3 X500) **அ.சா.பொ 2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

5. பின்னர், இவ்வழக்கில் அ.சா 1 யிடம் புகாரை பெற்று வழக்கு பதிவு செய்து காவல் உதவி ஆய்வாளர் திரு. கண்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புலன் விசாரணை முடித்து, எதிரி மீது ச/பி 392, 397, 506(ii) இதச வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

இவ்வழக்கில் நான் ஆவணங்களை பார்வையிட்டு தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் அ.சா 1 எந்த புகாரையும் கொடுக்கவில்லை என்றாலும், புகாரில் சொன்னது போல் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றும், புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், சம்பவ இடத்தில் வைத்து சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும், நான் சொன்னது போல், சொன்ன தேதி, நேரம், இடத்தில் வைத்து எதிரி கைது செய்யவில்லை என்றாலும், அவரிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலமமோ, சான்றுபொருட்களோ எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் இந்த வழக்கு புள்ளி விவரக் கணக்கிற்காக போடப்பட்ட வழக்கு சரவரி புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றாலும், இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur

**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 12.03.2026

SC. 141/2023

அ.சா 2 – குருநாதன்

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ம் நாள் குருநாதன் என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குருநாதன் | தந்தை பெயர் | முனுசாமி |
| வயது | 57 | கிராமம் | ஒசூர் |
| வட்டம் | ஒசூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**( எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**முதல் விசாரணை : –**

நான் ஒசூர் அண்ணா நகரில் குடியிருந்து கொண்டு ஆட்டோ ஓட்டுநராக உள்ளேன் . ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. )**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் கடந்த 08.11.2016 ம் தேதி மாலை 3.30 மணியைபோல் நான் ஆட்டோ ஸ்டேண்டில் இருந்த போது சத்தம் கேட்டு ரோட்டிற்கு வந்து பார்த்த போது, வெள்ளை சட்டை அணிந்திருந்த சுமார் 35 வயது மதிக்கத்தக்க ஒருவர் கையில் கத்தியுடன் பானிபூரி கடைக்காரர் கோவிந்தராஜை மிரட்டி அவர் பாக்கெட்டில் கையை விட்டு

பணத்தை எடுத்து கொண்டிருந்தார். அதனால், அவர் சத்தம் போட்டு, அதை கேட்ட மற்ற நபர்களும், அவரை காப்பாற்ற போகும் போது எதிரி அதே கத்தியை காட்டி யாராவது பக்கம் வந்தால் குத்தி விடுவதாக மிரட்டியதாகவும், அதனால் பொது மக்கள் பயந்து விலக அவர் அங்கிருந்த தப்பி ஓடியதாகவும், அது சம்மந்தமாக போலிசார் விசாரித்த போது நடந்த விவரங்களை கூறியதாகவும், தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாணை இல்லை என்று தெரிவித்ததால் , அவ்வாறே பதிவு செய்யப்பட்டது.**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur

**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 12.03.2026

SC. 141/2023

அ.சா 1 – கோவிந்தராஜ்

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ம் நாள் கோவிந்தராஜ் என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தராஜ் | தந்தை பெயர் | சின்னதம்பி |
| வயது | 39 | கிராமம் | ஒசூர் |
| வட்டம் | ஒசூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**( எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**முதல் விசாரணை : –**

நான் ஒசூர் ஹவுசிங் போர்டு சாந்தி நகரில் குடியிருந்து வருகிறேன். நான் சமையல் வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரியை எனக்கு தெரியாது. போலிசார் என்னிடம் ஒரு வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கினார்கள். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு விவரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**( அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. )**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் கடந்த 08.11.2016 ம் தேதி மதியம் 3.30 மணியளவில் வியாபாரம் செய்வதற்காக வந்திருந்தபோது என்னிடம் எதிரி என்னை மிரட்டி இடுப்பில் இருந்த கத்தியை எடுத்து பணம் கொடுக்கவில்லை என்றால் கத்தியில் ஒரே சொருகு சொருகிவிடுவேன் என்று மிரட்டி நான் வைத்திருந்த 1500/- ஐ பறித்து கொண்டவுடன் நான் சத்தம் போடவே அருகே இருந்தவர்கள் வரவும் எதிரி அவர் வைத்திருந்த கத்தியை காட்டி யாராவது என்னை பிடிக்க வந்தால் குத்தி கிழித்து விடுவேன் என்று மிரட்டவே பொது மக்கள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். பின்னர் , நான் அக்கம் பக்கத்தினரிடம் தகவல் சொல்லி ஒசூர் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தாகாவும், போலிசார் என்னை விசாரித்தாகவும், தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாணை இல்லை என்று தெரிவித்ததால் , அவ்வாறே பதிவு செய்யப்பட்டது.**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur